A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 62 / 2021**

திரு. பெனாசிர் அலி,
எண்.22, தர்மராஜா கோவில் தெரு,
ஆலந்தூர், சென்னை–600 016.

………மேல்முறையீட்டாளர்
(திரு. பெனாசிர் அலி)

எதிர்

1. உதவி பொறியாளர்/ஆலந்தூர்,
சென்னை மின்பகிமான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 KV ஆலந்தூர் SS வளாகம்,
எண். 623, MKN ரோடு,
ஆலந்தூர், சென்னை – 600 016.

2. செயற்பொறியாளர்/இ&ப/கிண்டி,
சென்னை மின்பகிமான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV வளாகம், கே.கே. நகர்,
சென்னை – 600 078.

...... எதிர்மனுதாரர்கள்
(திரு.J. மஹாவீர் ஜெயந்தி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப /ஆலந்தூர்
திரு. S. சந்திரபிரகாஷ், உதவி பொறியாளர்/ஆலந்தூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 09–08–2021**

**கேட்புரை நாள்: 07–10–2021**

**ஆணை நாள்: 12–01–2022**

09.08.2021 அன்று பெறப்பட்ட திரு. பெனாசிர் அலி, எண்.22, தர்மராஜா கோவில் தெரு,ஆலந்தூர், சென்னை–600 016 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 62/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது

மின்குறைதீப்பாளரின் கேட்புரை 07.10.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளரின் மின் அளவியில் உள்ள குளறுபடியை சரிசெய்து தான் அதிகபடியான செலுத்திய தொகையை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 கொரோனா காலமான மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2020 காலத்தில் கடை மூடப்பட்டிருந்த போது மின் கட்டணம் அதிகமாக வந்துள்ளதை குறித்து உதவி பொறியாளர்/ஆலந்தூர் அவர்களிடம் மேல்முறையீட்டாளர் புகார் அளித்துள்ளார்.

2.2 மேற்கண்ட புகார் குறித்து மின் அளவி ஆய்வு செய்து ரீடிங் டவுன்லோட் செய்து சோதனை முடிந்த பின் மின்கட்டணம் செலுத்துமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இதன் தொடர்பாக மூன்று மாத தவணையை அபராத தொகையுடன் மின் கட்டணத்தை செலுத்த கூறியதன் பேரில் அபராத தொகையுடன் மின் கட்டணத்தை மேல்முறையீட்டாளர் செலுத்தியுள்ளார்.

2.3 தான் அளித்த புகாரின் அடிப்படையில் தன்னுடைய மின் அளவி ஆய்வு செய்யப்படாததால் மேல்முறையீட்டாளர் சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-1, மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 25.01.2021 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-1 07.05.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 07.05.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"Order: (Operative Portion):*

*From the meter downloaded data it is found that meter is in good working condition and the assessment is found to be correct.*

*The grievance of the petitioner is addressed.*

*Hence, the petition is teated as closed."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 07.10.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. பெனாசிர் அலி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு.J. மஹாவீர் ஜெயந்தி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப /ஆலந்தூர் மற்றும் திரு. S. சந்திரபிரகாஷ், உதவி பொறியாளர்/ஆலந்தூர், சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–I ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:**

5.1 கடந்த 7 வருடங்களாக மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கண்ணாடி கடையை நடத்தி வருவதாகவும் கடந்த பல மாதங்களாக தனது மின் கட்டணம் மற்றும் மின்கருவியில் குளறுபடி உள்ளதாக புகார் அளித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்கண்ட புகாருக்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், குறிப்பாக கோவிட் ஊரடங்கு காலகட்டமான மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2020 நேரத்தில் பல வாரங்கள் கடை மூடப்பட்டிருந்த போது கூட அதிகப்படியான மின் கட்டணம் ரூ.5,000/- முதல் ரூ.7,000/- வரை செலுத்தும்படி கூறியதாகவும் இது தொடர்பாக 10.10.2020 அன்று எழுத்து பூர்வமாக உதவி பொறியாளர்/ஆலந்தூர் அவர்களிடம் புகார் அளித்தாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 உதவி பொறியாளர்/ஆலந்தூர் அவர்கள் மீட்டரை சரி பார்த்து ரீடிங் டவுன்லோட் செய்து பரிசோதனை முடிந்தபின் மின் கட்டணம் செலுத்தமாறும், அதுவரை மின் கட்டணம் செலுத்த வேண்டாம் என்று கூறியதின் பேரில் தானும் மின்கட்டணம் அதற்குபின் செலுத்தவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அதன்பின் மின் கட்டணம் செலுத்தாததால் மின் இணைப்பு துண்டிக்க ஊழியர்கள் வந்ததாகவும் அவர்களிடம் உதவி பொறியாளர்/ஆலந்தூர் மின் இணைப்பை துண்டிக்க வேண்டாம் என கூறியதால் ஊழியர்கள் மின் இணைப்பை துண்டிக்காமல் சென்று விட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 அதற்குபின் அடுத்த மின் கட்டணம் செலுத்தும் தேதியும் வந்துவிட்டதால் பல முறை உதவி பொறியாளர்/ஆலந்தூர் அவர்களை சந்திக்க முயன்று அவரை சந்திக்க முடியவில்லை எனவும், 22.01.2021 அன்று சந்தித்தபோது மின் ஊழியர் தேவராஜ் என்பவரை கவனித்து நடவடிக்கையெடுக்க அறிவுறுத்தியதாகவும், 3 மாத தவணையை அபராத தொகையுடன் மின்கட்டணத்தை செலுத்திய பின் மீட்டரை மாற்றி தருவதாக தேவராஜ் அவர்கள் கூறியதின் பேரில் மின்கட்டணத்தை அபராத தொகையுடன் கட்டிவிட்டதாகவும், ஆனால் இன்று வரை மீட்டர் மாற்றவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 எனவே இணையதளம் மூலம் புகார் அளித்தாகவும், ஆர். எஸ். துரை மற்றும் தேவராஜ் தன் கடைக்கு வந்து புகாரை வாபஸ் வாங்கினால் 2 நாட்களில் மீட்டர் மாற்றி தருவதாக கூறியதற்கு மீட்டர் மாற்றப்பட்ட பின்னர் புகார் வாபஸ் செய்கிறேன் என்று கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 அதன் பின் 10.02.2021 அன்று அந்த மாத மின்கட்டணத்தில் அவர்களாகவே மீட்டரில் உள்ளது போல இல்லாமல் யூனிட்டை குறைத்து போட்டு (230 யூனிட் ரூ.2518 எனவும், 17.04.2021–இல் 200 யூனிட்டுக்கு ரூ.2272/– என்று கணக்கீட்டு உள்ளதாகவும், மீட்டரில் குளறுபடி இல்லாமல் ஏன் கட்டணம் குறைத்தார்கள் எனவும், இப்போது மீண்டும் மின் கட்டணம் மிகவும் அதிகமாக உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 இது தொடர்பாக பலமுறை புகார் தெரிவித்தும் அவர்களாகவே புகாரை முடித்து வைத்துவிடுவதாகவும், மீட்டர் சரியாக உள்ளது என்று கூறி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 புகார் கொடுத்த மின் பயனீட்டாளர் 241–001–725 வீதப்படி V–இல் இருக்கும் மின் இணைப்பிற்கு ஒவ்வொரு இரண்டு மாத கணக்கெடுப்பின்படி அதற்குண்டான கட்டணத்தையும் செலுத்தி வருவதாகவும், இவற்றிலும் கூடுதலாக வேறு எநத கட்டணமும் சேர்த்து வசூலிக்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 கடந்த ஆண்டு ஏப்ரல் 2020–இல் கணக்கெடுப்பின் போது கொரோனா (கோவிட்–19) காலமாக அரசு அறிவிப்பின்படி அந்த மாத கணக்கீடு செய்ய முடியவில்லை எனவும், ஆகையால் ஏப்ரல் 2020 கணக்கீட்டிற்கு பதிலாக முந்தைய மாதமான பிப்ரவரி 2020–இல் செலுத்திய மின் கட்டணத்தை (Previous assessment amount billed) செலுத்த கோரியதன் படியேமின் கட்டண வசூல் செய்யப்பட்டுள்ளது இவற்றிலும் கூடுதலாக வேறு எந்த கட்டணமும் சேர்த்து வசூலிக்கப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 கணக்கீட்டு சுழற்சி முறையில் அடுத்த கணக்கெடுப்பில் 06/2020–ல் இந்த மின் பயனீட்டாளருக்கு நான்கு மாதம் கணக்கீடு ஆகும் என்வும், இவற்றில் கடந்த ஆண்டு பிப்ரவரி 2020–இல் முடித்த கணக்கீடு அளவு ரீடிங் 9510 மற்றும் ஜூன்/2020–இல்

எடுத்த ரீடிங் 10410 முறையே பயன்படுத்திய யூனிட் அளவு 900 ஆகும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இதன் பயனீட்டு அளவு பட்டியல்–1

| வ.எண். | கணக்கீடு மாதம் | மின் அளவீடு ஆரம்பம் | மின் அளவீடு முடிதல் | பயன்படுத்திய யூனிட் | தொகை ரூபாய் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 08/02/2020 | 8990 | 9510 | | | 06/2020 |
| 2 | 08/04/2020 | Previous assessment amount billed | | | 4983 | வசூல் |
| 3 | 04/06/2020 | 9510 | 10410 | 900/2 | 8783 | ரூ.3800/– |

பட்டியல் 1–இல் உள்ள் நான்கு மாதம் கணக்கீட்டிற்கு 900 யூனிட் ஆகும் எனவும், இரண்டு மாதத்திற்கு 450 யூனிட் முறையே தொகை ரூ.4391.50x2=8783 இவற்றில் 04/2020 Previous assessment amount billed தொகை ரூ.4983/– கழித்து 06/2020 மாத பயன்பாட்டிற்கு ரூ.3800/– மட்டும் வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், இவற்றிலும் கூடுதலாக வேறு எந்த கட்டணமும் சேர்த்து வசூலிக்கப்படவில்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அடுத்த கணக்கீட்டு மாதமான அக்டோபர் 2020–இல் 10.10.2020 அன்று கணக்கீடு செய்யப்பட்டதில் ஆகஸ்டு 2020–இல் முடித்த கணக்கீட்டு அளவு 10870 மற்றும் அக்டோபர் 2020–இல் எடுக்கப்பட்ட ரீடிங் 11690, முறையே பயன்படுத்திய யூனிட் அளவு 820, இவற்றிற்கு தொகை ரூ.7505/– ஆகும் எனவும், இம்மாதம் கணக்கெடுப்பின் மின் கட்டண தொகை ரூ.7505/– அதிகமாக வந்துள்ளதை எழுத்து பூர்வமாக தெரிவித்துள்ளதாக புகாரில் கூறியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இதன் பயனீட்டு அளவு பட்டியல்–2

| வ.எண். | கணக்கீடு மாதம் | மின் அளவீடு ஆரம்பம் | மின் அளவீடு முடிதல் | பயன்படுத்திய யூனிட் | தொகை ரூபாய் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 07.08.2020 | 10870 | 11690 | 820 | 7505 | |
| 2 | 05.11.2020 | DC reading | 11885 | 195 | 2134 | |
| | | RC + BPSC | | | 846 | |
| | | Total | | | 10485 | |

6.5 பட்டியல் 2-இல் மின்கட்டணம் தொகை ரூ.7505/- மற்றும் மின்கட்டணம் தாமதமாக செலுத்தியது, கணினியில் ரீடிங் (11885) பதியபட்டு அதற்கு உண்டான தொகையுடனும் சேர்த்து மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், மீண்டும் ஜூன் 2021-இல் அடுத்த கொரோனா காலமாக அரசு அறிவிப்பின்படி அந்த மாத மின் கணக்கீடு செய்யமுடியவில்லை எனவும், அதற்கு பதிலாக ஜூன் 2019-இல் மின் பயனீட்டாளர் செலுத்திய மின் கட்டணத்தை செலுத்த (Previous assessment amount billed 06/2019) வேண்டும் என்று மின்வாரியம் கணக்கீடு செய்யப்பட்டதை ஜூன் 2021-இல் 12.06.2021 ரூ.6167/- வசூல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 கணக்கீடு சுழற்சி முறையில் அடுத்த கணக்கெடுப்பில் 08/2021-ல் மின் பயனீட்டாளருக்கு நான்கு மாதம் கணக்கீடு ஆகும். இவற்றில் ஏப்ரல்-2021-இல் முடித்த கணக்கீடு அளவு ரீடிங் 12550 மற்றும் ஆகஸ்டு 2021-இல் எடுத்த ரீடிங் 13870 முறையே பயன்படுத்திய யூனிட் அளவு 1320 ஆகும்.

இதன் பயனீட்டு அளவு பட்டியல்-3

| வ.எண். | கணக்கீடு மாதம் | மின் அளவீடு ஆரம்பம் | மின் அளவீடு முடிதல் | பயன்படுத்திய யூனிட் | தொகை ரூபாய் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12.04.2021 | 12350 | 12550 | | | 08/2021 |
| 2 | 12.06.2021 | Previous assessment amount billed | | | 6167 | வசூல் |
| 3 | 11.08.2021 | 12550 | 13870 | 1320/2 | 12333 | ரூ.6166/- |

பட்டியல் 3-இல் உள்ள நான்கு மாதம் கணக்கீட்டிற்கு 1320 யூனிட் ஆகும் எனவும், இரண்டு மாதத்திற்கு 660 யூனிட் முறையே தொகை ரூ.6166.65x2 =12333 இவற்றில் 06/2021-இல் Previous assessment amount billed தொகை ரூ.6167/- கழித்து 08/2021-இல் மாத கணக்கெடுப்பின் ரூ. 6166/- மட்டும் வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூடுதலாக வேறு எந்த கட்டணமும் சேர்த்து வசூலிக்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 பட்டியல் 1 மற்றும் பட்டியல் 3-இல் கொரோனா காலமாக 2020-2021 ஆம் ஆண்டுகளில் அரசு அறிவிப்பின்படி அதற்குண்டான மாதங்களில் மின் வாரிய பணியாளர்கள் கணக்கீட்டு பணி செய்யவில்லை எனவும், இதன் காரணமாக கணக்கீடு

(Previous assessment amount billed) முறையில் மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 பட்டியல்–2இல் மின் கட்டண தொகை மற்றும் மின் கட்டணம் தாமதமாக செலுத்தியத்திற்கும், கணினியில் மின் துண்டிப்பிற்குண்டான ரீடிங் வரை பதியப்பட்டு அதற்குண்டான தொகையுடனும் சேர்த்து மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே மேற்கண்ட மின் பயனீட்டாளர் இதற்குண்டான குறைபாடுகளை கேட்கப்பட்டுள்ளதால் மின் அளவு காட்டி ஆய்வு செய்ததில் ரீடிங் 14089 எம்.டி.1.69, மீட்டரில் உள்ளதால் மின் அளவு காட்டி நன்றாக, இயங்கி வருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு பெனாசிர்அலி (P.K. சாகுல் ஹமீது அவர்களின் பெயரில் உள்ள மின் இணைப்பு) தன்னுடைய மின் இணைப்பில் மின் கட்டணம் அதிகமாக வருவதாகவும், மின் அளவியில் குறைபாடு உள்ளதாக புகார் அளித்ததாகவும் எதிர்மனுதாரர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென தெரிவிக்கிறார். மார்ச் மற்றும் ஏப்ரல் போன்ற கொரோனா ஊரடங்கு காலத்திலும் அதிகப்படியான மின் கட்டணம் வந்ததால் உதவி மின் பொறியாளர்/ஆலந்தூர் அவர்களிடம் புகார் அளித்ததாக தெரிவித்துள்ளார். மின் அளவி சோதனை முடிவு வரும் வரை மின் கட்டணம் செலுத்த வேண்டாமென்று மின் ஊழியர் கூறியதால் அபராதத்துடன் மின் கட்டணம் செலுத்தியதாக தெரிவித்துள்ளார். மின் அளவி சரியாக உள்ளதா என அறிய எதிர்மனுதாரர் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லையென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் (எண் 241–001–725, TF–V) இருமாத கணக்கீட்டின்படி உரிய மின்கட்டணம் மட்டுமே வசூலித்துள்ளதாகவும் கூடுதலாக வேறு எந்த தொகையும் வசூலிக்கப்படவில்லை எனவும், ஏப்ரல் 2020–இல் கொரோனா காலத்தில் அரசின் அறிவிப்பின்படி பிப்ரவரி 2020–இல் செலுத்திய மின் கட்டணத் தொகையை வசூலித்ததாகவும், அதே போன்று மீண்டும் ஜூன் 2021–இல் கொரோனா

காலத்திலும் அரசின் அறிவிப்பின்படி ஜூன் 2019–இல் செலுத்திய மின் கட்டணத் தொகை மட்டுமே வசூலித்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆகஸ்ட் 2020 கணக்கீட்டு மாதத்திற்குரிய மின் கட்டணத்தொகை ரூ.7,505/– செலுத்தாததால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாகவும், 05.11.2020 வரையிலான மின் பயனீட்டு கட்டணம், தாமத கட்டணம் மற்றும் மறுஇணைப்பு கட்டணம் ஆகியவற்றை சேர்த்து மொத்தமாக 01.12.2020 அன்று மேல்முறையீட்டாளர் செலுத்தியுள்ளதாகவும், மேலும் மின் அளவியை ஆய்வு செய்து மின் அளவி நன்றாக இயங்கி வருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மின் நுகர்வோர் பேரேட்டினை ஆய்வு செய்ததில் 4/2020 கணக்கீட்டு மாதத்திற்கு 2/2020 கணக்கீட்டு மாதத்தின் மின் கட்டணத் தொகையும், 6/2021 கணக்கீட்டு மாதத்திற்கு 6/2019 கணக்கீட்டு மாதத்தின் மின் கட்டணத் தொகையும் வசூல் செய்திருப்பதும், அதன்பிறகு 6/2020 கணக்கீட்டு மாதத்தின் மின் கட்டணம் மற்றும் 8/2021 கணக்கீட்டு மாதத்தின் மின் கட்டணமும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதியின்படியும் தமிழக அரசின் வழிகாட்டுதலின்படியும் தமிழகம் முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளபடியே மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பிலும் விதிமுறைகளை கடைபிடித்து மின்கட்டணத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது அறிய முடிகிறது. மேற்கண்டவாறு மின்கட்டணம் வசூலிக்கப்பட்டதில் விதிமீறல் ஏதுமில்லை என தீர்வு செய்கிறேன்.

7.5 கொரோனா காலத்தில் அதிகப்படியான மின்கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் புகார் தெரிவித்தும் எதிர்மனுதாரர் மின்அளவியை பரிசோதனை செய்து மின்அளவியில் குறைபாடு இல்லையென்பதற்கு ஆதார சோதனை அறிக்கையுடன் மேல்முறையீட்டாளருக்கு பதில் அளிக்காதது உரிமம்தாரரின் சேவை குறைபாடென கருதுகிறேன். மேலும் மேல்முறையீட்டாளர் உதவி பொறியாளர் அலுவலகத்தில் புகார் அளித்தபோது மின் ஊழியர் திரு தேவராஜ் அவர்கள் மின் அளவி சோதனை அறிக்கை வரும் வரை மின் கட்டணம் செலுத்த வேண்டாமென்று மேல்முறையீட்டாளரிடம் தெரிவித்தது தவறான வழிகாட்டுதல் என கருதுகிறேன். இதன் விளைவாகவே மேல்முறையீட்டாளர் 10/2020 மின் கட்டண மாதத்திற்குரிய கட்டணத் தொகையை உரிய காலத்தில் செலுத்தவில்லையெனவும், அதன் காரணமாக தாமத கட்டணம் மற்றும் மறு இணைப்பு கட்டணம் செலுத்த

நேரிட்டதாக அறியமுடிகிறது. மாறாக, 10/2020 கட்டண மாதத்திற்குரிய மின் கட்டணத்தை உரிய காலத்திற்குள் ஆட்சேபனை கடிதத்தோடு செலுத்திவிட்டு பிறகு புகார் மனு கொடுத்து மின் அளவியின் குறைபாட்டை தெரிவித்து நிவாரணம் பெறுமாறு மின் ஊழியர் மேல்முறையீட்டாளருக்கு சரியான வழிகாட்டுதல் செய்திருக்க வேண்டும்.

7.6 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் உள்ள மின் உளவி மாற்றப்படாமல் இந்நாள் வரை பயன்பாட்டில் உள்ளதாலும், மார்ச் மற்றும் ஏப்ரல் கொரோனா காலங்களுக்கு முன்பும், இதற்கு பின்பும் மின் இணைப்பின் பயன்பாடு ஒப்பிடும் அளவிற்கு உள்ளதாலும், மின் கணக்கீட்டு முறையிலோ அல்லது மின் அளவியில் குறைபாடோ இல்லையென தீர்வு செய்கிறேன். CMRI data பதிவிறக்கம் செய்து மேல்முறையீட்டாளருக்கு உரிய விளக்கம் அளித்திருந்தால் இத்தகைய சேவை அதிருப்தி நிகழ்ந்திருக்காது. மேலும், மின்அளவி பழுது என மேல்முறையீட்டாளர் கருதினால் மின் அளவியை விதிமுறைகளுக்குட்பட்டு "challenge test" செய்வதற்கு சம்மதம் தெரிவித்து எதிர்மனுதாரரிடம் மனு அளித்து உறுதி செய்து கொள்ளலாமென அறிவுறுத்துகிறேன். மின் நுகர்வோரிடத்து காட்டும் உரிமம்தாரரின் அனுகுமுறையில் மாற்றம் தேவை எனவும், மின் நுகர்வோரின் திருப்தியே உரிமம்தாரரின் குறிக்கோளாக இருக்கவேண்டுமென கருதுகிறேன்.

**8.0 முடிவுரை:**

8.1 பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி மின் அளவி பழுதிற்கான முகாந்திரம் இல்லையெனவும், மின் பயன்பாட்டு கணக்கீட்டு முறையிலும் தவறில்லையெனவும் கருதுகிறேன். ஆகையால் மேல்முறையீட்டாளரிடமிருந்து குறிப்பிட்டுள்ள காலங்களில் சரியான மின்கட்டணத் தொகை மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளதாக தீர்வு செய்கிறேன்.

8.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 62/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்:

1. திரு. பெனாசிர் அலி,
எண்.22, தர்மராஜா கோவில் தெரு,
ஆலந்தூர், சென்னை–600 016.

2. உதவி பொறியாளர்/ஆலந்தூர்,
சென்னை மின்பகிமான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 KV ஆலந்தூர் SS வளாகம்,
எண். 623, MKN ரோடு,
ஆலந்தூர், சென்னை – 600 016.

3. செயற்பொறியாளர்/இ&ப/கிண்டி,
சென்னை மின்பகிமான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV வளாகம், கே.கே. நகர்,
சென்னை – 600 078.

4. மேற்பார்வை பொறியாளர், – By email
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை–78.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.